22.03.2019

அ.வ.எண்: 35/2014

பெயர்: சுப்பிரமணி

பி.வா.சா:1

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

நாகம்மாள் எனது உறவினர். கஜேந்திரன் நாகம்மாளின் மகன். நாகம்மாள் எனது மனைவியின் அக்கா. வாதியின் மகன் ராதாகிருஷ்ணன் எனது மனைவியின் உறவினர். நாகம்மாளுக்கும் எனக்கும் ராதாகிருஷ்ணனுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. எனது மனைவியின் அக்கா நாகம்மாளை ராதாகிருஷ்ணன் திருமணம் செய்துகொண்டதால் உறவினர். நாகம்மாளுக்கும் ராதாகிருஷ்ணனுக்கும் எப்போது திருமணம் நடந்தது என்று தெரியாது. 3 பிள்ளைகள் உள்ளார்கள். 1. கீதா, 2. கஜேந்திரன், 3. பானு. கீதா இறந்துவிட்டார். பானுவை எனது மைத்துனர் திருமணம் செய்துகொண்டார். அவர்கள் முன்பு அரும்பாக்கத்தில் குடியிருந்தார்கள் அதன் பிறகு ராதாகிருஷ்ணன் மனைவி குழந்தைகளை விட்டுவிட்டு மற்றொரு பெண்ணை கூட்டி கொண்டு சென்னையில் குடிபெயர்ந்துவிட்டார். வாதியும் ராதாகிருஷ்ணனுடன் சென்று குடியிருக்கிறார் என்றால் சரியல்ல. ராதாகிருஷ்ணன் சென்னை சென்று 3 நாட்களில் ராதாகிருஷ்ணன் அவருடன் சென்ற பெண்ணும் இறந்துவிட்டதாக கூறினார்கள். அவர்கள் தற்கொலை செய்து கொண்டார்கள் என்றால் எனக்கு தெரியாது. 05/02/1986 ல் தற்கொலை செய்து கொண்டார்கள் என்றால் சரிதான். பி.சா.ஆ.1 சென்னையில் வாங்கப்பட்டது என்றால் சரிதான்.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.**